**தலைப்பு 242 – முகாமைத்துவ சேவைகள் திணைக்களம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியற்ற அபிப்பிராயம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று, அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று மற்றும் காசுப்பாய்ச்சல் கூற்றுடன் கூடிய 2020 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(1) பிரிவின் பிரகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் உள்ளடங்கிய பொழிப்பு அறிக்கை 2021 ஜூன் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 11(2) பிரிவின் பிரகாரம் திணைக்களம் தொடர்பான வருடாந்த விரிவான முகாமைத்துவக் கணக்காய்வு அறிக்கை 2021 ஆகஸ்ட் 16 ஆந் திகதி கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு வழங்கப்பட்டது. இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 10 ஆம் பிரிவின் பிரகாரம் இந்த அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்படும்.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதிக்கூற்றுக்களில் 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச்செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியற்ற அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பு

பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு கோட்பாடுகளுக்கு அமைவாகவும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38 பிரிவில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கும் வகையில் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மோசடிகள் மற்றும் தவறுகள் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் இன்றிய நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமான உள்ளகக் கட்டுப்பாட்டினை தீர்மானித்தல் கணக்கீட்டு உத்தியோகத்தரின் பொறுப்பாகும்.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 16(1) பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கக் கூடிய

வகையில் தனது வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகள் முறையாகப் பேணிச் செல்லப்படல் வேண்டும்.

தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 38(1)(இ) உப பிரிவின் பிரகாரம் திணைக்களத்தின் நிதிக் கட்டுப்பாட்டிற்காக ஆக்கபூர்வமான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை தயாரித்து பேணிச் செல்லுவதனை கணக்கீட்டு உத்தியோகத்தர் உறுதிப்படுத்துதல் வேண்டியதுடன், அம்முறைமையின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக காலத்திற்கு காலம் மீளாய்வொன்று மேற்கொள்ளப்பட்டு அதன் பிரகாரம் முறைமையை செயற்திறனாக மேற்கொள்வதற்கு தேவையான மாற்றங்கள் செய்யப்படல் வேண்டும்.

## 1.4 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

-----------------------------------------------------------------------------------------------------------

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களில் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன், அதன் பொருண்மை தன்மையை இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் எடுக்கப்படும் பொருளாதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் ஒரு பகுதியாக துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றை பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு உள்ளக கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வமான தன்மை தொடர்பாக அபிப்பிராயமொன்றை தெரிவிப்பதற்கு கருத்து தெரிவிக்கவில்லை.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்களை பொருத்தமான மற்றும் நியாயமான முறையில் நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

- ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பிக்கும் போதும், நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்காக அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமாகவும் நியாயமாகவும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக,

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புக்கள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக கணக்கீட்டு உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டது.

## 1.5 ஏனைய சட்டத்தேவைப்பாடுகள் தொடர்பான அறிக்கை

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச் சட்டத்தின் 6(1)(ஈ) பிரிவின் பிரகாரம் பின்வரும் விடயங்களை நான் வெளிப்படுத்துகின்றேன்.

(அ) நிதிக்கூற்றுக்கள் முன்னைய ஆண்டுடன் நேரொத்துள்ளதாக.

(ஆ) முன்னைய ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் என்னால் மேற்கொள்ளப்பட்டிருந்த பரிந்துரைகள் செயற்படுத்தப்பட்டிருந்தன.

## 2 நிதிக் கூற்றுக்கள்

### 2.1 கட்டுநிதி முகாமைத்துவம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2020 ஆண்டிற்கான திணைக்களத்தினால் தயாரிக்கப்பட்டிருந்த கட்டுநிதித் திட்டத்தின் படி, திசெம்பர் மாதத்தில் திறைசேரியில் இருந்து விண்ணப்பிக்க வேண்டியிருந்த கட்டுநிதி ரூபா 8,680,000 தொகை காணப்பட்டதுடன், விண்ணப்பிக்கப்பட்ட கட்டுநிதி ரூபா 10,548,000 தொகையாக காணப்பட்டமையால் ரூபா 1,868,000 இற்கான முரணொன்று அவதானிக்கப்பட்டதுடன், அது விண்ணப்பிக்க வேண்டிய கட்டுநிதியில் 22 சதவீதத்தை கொண்டுள்ளது. | ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு ஏற்பாடுகளின் அடிப்படையில் ஒவ்வொரு மாதமும் எதிர்பார்க்கும் செலவின் படி கட்டுநிதி திட்டமிடப்பட்ட போதிலும் குறிப்பிட்ட மாதத்தில் உண்மையாகவே மேற்கொள்ள நேரிட்டுள்ள செலவின் படி வருடாந்த கட்டுநிதி எல்லையுள் கட்டுநிதி விண்ணப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. | வருடாந்த மதிப்பீடு தத்துரூபமாக மற்றும் ஆக்கபூர்மாக தயாரித்தல் தேவைப்பாடாகும். |

**2.2 செலவு முகாமைத்தும்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் போது மூலதனச் செலவுகளுக்காக ரூபா 1,350,000 தொகை ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்ததுடன், ஆண்டிற்கான உள்ளவாறான செலவு ரூபா 114,181 தொகை காணப்பட்டமையால் ஏற்பாடுகளில் சேமிப்பு தேறிய ஏற்பாடுகளில் 92 சதவீமாக காணப்பட்டது. | கொவிட் 19 காரணத்தினால் பெறுகை அலுவல்கள் திட்டமிட்டவாறு மேற்கொள்ள முடியாமல் போன காரணத்தினாலும் (செலவு விடய இலக்கம் 2102) சிக்கனமான முறையில் வாகனம் பராமரிக்கப்பட்டமையால் (செலவு விடய இலக்கம் 2003) பயிற்சி சந்தர்பங்களுக்காக விண்ணப்பிப்பதற்கும் மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக திட்டமிடுவதற்கும் முடியாமல் போனமையாலும் (செலவு விடய இலக்கம் 2401) மூலதன ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | வருடாந்த மதிப்பீடு தத்துருபமாக மற்றும் ஆக்கபூர்மாக தயாரித்தல் தேவைப்பாடாகும். |
| (ஆ) | 1101 மற்றும் 2401 ஆகிய செலவு விடயங்களின் கீழ் மொத்த மதிப்பீட்டு ஏற்பாடுகள் முறையே ரூபா 100,000 மற்றும் ரூபா 150,000 இற்கான தொகையொன்று வருட இறுதியில் செலவழிக்கப்படாமல் சேமிக்கப்பட்டிருந்தது. | கொவிட் 19 நிலைமையின் கீழ் பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக விண்ணப்பிப்பதற்கு மற்றும் பயிற்சி சந்தர்ப்பங்களுக்காக திட்டமிடுவதற்கு முடியாமல் போன காரணத்தினால் ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டன. | - மேற்படி - |
| (இ) | மீளாய்வாண்டின் போது 10 செலவு விடயங்களுக்காக ரூபா 8.032 மில்லியன் தொகைகான மிகை ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தமையால் அந்த ஏற்பாடுகளை பயன்படுத்திய பின்னர் ரூபா 2.95 மில்லியன் தொகைக்கான ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளது. அச் சேமிப்பு ஒதுக்கப்பட்டிருந்த மொத்த ஏற்பாடுகளில் 10 சதவீதம் முதல் 99 சதவீதம் வரையான வீச்சு அளவினை பெற்றிருந்தது. | கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் சிக்கனமாக ஏற்பாடுகள் பயன்படுத்தப்பட்டதால் நிதியம் சேமிக்கப்பட்டிருந்தது. | - மேற்படி - |

3. செயற்பாட்டு மீளாய்வு

3.1 செயலாற்றல்

3.1.1 திட்டமிடல்

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2014 பெப்ரவரி 17 திகதிய 01/2014 இலக்கம் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கையின் 3(ஆ) பிரிவின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கும் போது ஆண்டிற்கான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி மற்றும் உள்ளவாறான பதவியணி, வருடாந்த செயற்பாடுகளுக்கான கட்டுநிதி தேவைத் திட்டம், ஆண்டின் போது ஆண்டிற்கான பாதீட்டை அடிப்படையாகக் கொண்ட முக்கியத்துவ அடிப்படையில் தயாரிக்கப்பட்ட செயல் நடவடிக்கை திட்டம். | குறிப்பிட்ட குறைபாடுகளை சரிசெய்து பொதுநிதிச் சுற்றறிக்கை 01/2014 இன் பிரகாரம் வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் எதிர்காலத்தில் தயாரிப்பதற்கு குறித்துக்கொண்டேன். | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பட வேண்டும். |

3.1.2 பணிப் பொறுப்புக்கள் நிறைவேற்றப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டத்தில் நிறுவப்பட்டிருந்த பின்வரும் குறிக்கோள்கள் மற்றும் அதனுடன் தொடர்புடைய செயலாற்றல் சுட்டிகள் திணைக்களத்தினால் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | | |
| (அ) 2017 ஆகஸ்ட் 15 திகதிய அமைச்சரவை தீர்மானத்தின் படி காலண்டு அடிப்படையில் நாளதுவரை ஆக்கப்பட்ட ஊழியர்களின் தகவல்கள், அமைச்சரவைக்கு சமர்ப்பித்தல் அடிப்படையில் 2019 மற்றும் 2020 ஆண்டுகளுக்கான இரண்டாம், மூன்றாம் மற்றும் நான்காம் காலண்டுகளின் ஊழியர் அறிக்கைகள் சமர்ப்பித்தல். | கொவிட் 19 நிலைமை பரவிய காரணத்தினால் தகவல்கள் உரிய முறையில் ஏனைய நிறுவனங்களில் இருந்து கிடைக்கப் பெறாமையால் குறிப்பிட்ட தகவல் சமர்ப்பிக்க முடியாமல் இருந்தது. | திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அரசாங்க சேவை மனித வளத் தகவல்களை வெளியிடுதல் மற்றும் 2020 ஆண்டின் அரசாங்க சேவை மனித வளங்கள் தொடர்பாக தகவல்களை உட்படுத்தி திணைக்களத்தின் வெளியீடுகள் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | கொவிட் 19 தொற்றுநோய் நிலையில் ஏனைய அமைச்சுக்கள், திணைக்களங்கள் மற்றும் நியதிச் சட்ட நிறுவனங்களில் இருந்து தகவல்கள் பெற்றுக்கொள்வதில் சிரமங்கள் ஏற்பட்ட காரணத்தினால் குறிப்பிட்ட கூற்றினை நாளதுவரை ஆக்க முடியவில்லை. | திட்டமிடப்பட்ட பணிப்பொறுப்புக்கள் குறிப்பிட்ட காலப்பகுதியுள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். |
| (இ) | வருடாந்த செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை உள்ளடக்கி திணைக்களத்தின் வலைதளம் நாளதுவரை ஆக்கப்பட்டிருக்கவில்லை. | 2020 ஆண்டிற்கான செயல் நடவடிக்கைத் திட்டம் மற்றும் செயலாற்றல் அறிக்கை உட்படுத்தி வலைதளத்தை நாளதுவரை ஆக்குவதற்கு குறித்துக்கொண்டேன். | வலைதளத்தை உரிய முறையில் நாளதுவரை ஆக்கப்பட வேண்டும். |

**4. மனித வள முகாமைத்துவம்**

**4.1 இணைந்த பதவியணி, உள்ளவாறான பதவியணி மற்றும் ஆளுக்குரிய சம்பளங்கள் வேதனங்களுக்கான செலவுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடமாக காணப்படும் மனிதவள முகாமைத்துவ விஷேடத்துவர் பதவி, வேலை ஆய்வு விஷேடத்துவர் பதவி மற்றும் பிரதிப் பணிப்பாளர் / உதவிப் பணிப்பாளர் பதவிகள் 02, 2019 ஆண்டு முதல் காணப்படுவதுடன், சிரேஷ்ட மட்டத்தில் வெற்றிடங்கள், சிரேஷ்ட மட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையில் 40 சதவீதத்தை பெறுவதுடன், அது திணைக்களத்தின் செயலாற்றுகையை பாதிக்கக்கூடியாக இருந்ததென அவதானிக்கப்பட்டது. | பிரதி மற்றும் உதவிப் பணிப்பாளர் பதவிகளில் காணப்படும் வெற்றிடங்களை நிரப்புவதற்கு தேவையான நடவடிக்கை எடுக்கும் படி பொது நிருவாக அமைச்சுச் செயலாளருக்கு அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் இது வரை உத்தியோகத்தர்கள் வழங்குதல் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளை முறைப்பிரகாரம் பேணுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இரண்டாம் மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகள் 03 உம், முகாமைத்துவ சேவை உத்தியோகத்தர் பதவிகள் 02 உம், ஆரம்ப தர மட்டத்தில் வெற்றிடமாக காணப்பட்ட 02 சாரதிப் பதவிகள், 01 அலுவலக உதவியாளர் என 08 பதவிகள் வெற்றிடமாக காணப்படுகின்றன. | சாரதிகள் மறறும் அலுவலக உதவியாளர்கள் வெற்றிடங்களை நிரப்பும் படி அறிவிக்கப்பட்டுள்ளது. | - மேற்படி - |